# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.7/2015 L.W.9 P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுப்புராயன்<br>சிறப்பு உதவிஆய்வாளர்<br>ஓய்வு | Caste | |
| Father/Husband Name | அம்மாசி | Calling | |
| Village | இந்திரா நகர், நெய்வேலி | Religion | |
| Taluk | குறிஞ்ப்பாடி | Age | 63 |
| District | கடலூர் | Time | 11.50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 12.10.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**
**எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்,**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலி இந்திரா நகரில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவிஆய்வாளராக பணிபுரிந்து 31–12–2018 ம் தேதி பணிநிறைவு பெற்று மேற்ச்சொன்ன அதே முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 01–06–2014 ம் தேதி பெண்ணாடம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 10.10 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது விருத்தாசலம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகச்சையில் இருந்த ராஜேந்திரன் த–பெ.மகாராஜன் என்பவர் வயது 54 மாரியம்மன் கோவில் தெரு, பெ.பூவனூர், திட்டக்குடி தாலுக்காவை சேர்ந்தவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை அப்படியே நான் பதிவுசெய்து பின்னர் 14.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய கு.எண்.97–2014, ச.பி 294(பி), 323, 324, 506(2) இ.த.ச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். மருத்துவமனையில் நான் பதிந்த புகார் வாக்குமூலம்தான் தற்போது சமூகம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம்தான் **அ.சா.ஆ.7** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். என்னால் பதிவுசெய்யப்பட்ட அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் வாக்குமூலத்தை இணைத்து சமூகம் நீதிமன்றத்தாருக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு தொடாப்புடைய அதே ஆவணங்களை என் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கின் கோப்பினை அப்போது பணியிலிருந்த உதவி ஆய்வாளர் திரு.ஆசைதம்பி பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. அ.சா.ஆ.7** புகார் வாக்குமூலத்தினை பகல் **3.00** மணிக்கு மருத்துவமனையில் பெற்றேன். அப்போது எதிரிகளும் விருத்தாசலம் அரசுமருத்துவமனையல் சிகிச்சையில் இருந்தார்கள் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் **4** கிலோமீட்டர் தொலைவு இருக்கும். **14.30** மணிக்கு புகார் வாக்கமூலத்தை பெற்ற அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஐ பெற்றேன். **அ.சா.ஆ.8** முதல் தகவல் அறிக்கையை எந்த தேதியில் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தீர்கள் என்றால் **?** புகார் பதிந்த அன்றே **01–06–2014** அனுப்பிவைத்தேன் ஆனால் நேரம் தற்போது நினைவில்லை.

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

**TITTAGUDI**